மின் அழுத்தம் குறைவாக இருக்கலாமே தவிர, முழுமையாக அந்தப் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. அப்படியிருப்பின், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதிகாரிகளை அங்கு அனுப்பி, அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

மீன் பதனிடும் பூங்கா

***2681 திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, குறும்பனையில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குறும்பனையில் மீன் பதனிடும் பூங்காங்கள் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மொத்தம் 42 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. அதில் 15 பெரிய மீனவ கிராமங்கள் என்னுடைய தொகுதியில் உள்ளன. ஆழ்கடல் மீன் பிடிப்பதில் அங்குள்ள மீனவர்கள் திறமையானவர்கள். அங்கு, சுமார் 1,500-க்கும் அதிகமான விசைப் படகுகளும், சுமார் 4,000-க்கும்*

மேற்பட்ட நாட்டுப் படகுகளும் இருக்கின்றன. மீன்பிடித் தொழில் என்பது அவர்களது முக்கியமான தொழிலாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், சுமார் 60,000 டன் மீன்கள், ஆண்டொன்றிற்குக் கிடைக்கின்றன. அங்குள்ள மீனவர்கள் மாதக் கணக்கில், கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்து வருகின்றார்கள். அதனால் அங்கு அதிகமாக மீன்கள் கிடைக்கின்றன. அதிகமாக மீன்களைப் பிடிக்கின்றபோது, வியாபாரிகள் அதிக அளவில் மீன்களை வாங்க முடியாத ஒரு சூழ்நிலையும், அதனால் மீன்களை முழுமையாக விற்க முடியாத ஒரு சூழ்நிலையும் ஏற்படுகிறது. எனவே, மீன்களைச் சேகரித்து வைப்பதற்கும், மீன்களைப் பதனிடுவதற்கும், அங்கே மீன் பதனிடும் பூங்கா ஒன்றை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனை மறுபரிசீலனை செய்து, மீன் பதனிடும் பூங்கா ஒன்றை அங்கே அமைத்துக்கொடுத்தால், மீனவர்கள் தங்களின் பணியினைச் சிறப்பாகச் செய்வதற்கும், தங்களது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்வதற்கும், வாய்ப்பு இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர்கள் சொந்த ஊர்களில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், மற்றொரு கேள்வி உங்களுக்கு உள்ளது. அப்போது கேட்டுக்கொள்ளுங்கள். இப்போது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்தல் நில காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், 2011-லிருந்து 2016 முடிய மீன் வளத் துறைக்கு 2,525 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எந்தவொரு மாநில அரசும், எந்தக் காலக்கட்டத்திலும், யாரும் இவ்வளவு தொகையை இந்தத் துறைக்கு ஒதுக்கீடு செய்தது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள், மீனவர்களின் நல்வாழ்விற்காக, 2,525 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ததன் விளைவாக, இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களின் நல்வாழ்வைக் காப்பதிலும், அவர்களின் அடிப்படைக் கட்டமைப்பு

வசதிகளை மேம்படுத்துவதிலும், முதன்மையான மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் விளங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில், நம்முடைய கடல் மீன் பொருள் உணவுகள், ஏற்றுமதி நிறுவனம் Marine Products Export Development Authority (MPEDA) அவர்கள் கொடுத்த, தகவலின்படி, 5,000 கோடி ரூபாய்க்கு, நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து மீன் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அன்னியச் செலாவணியாக பெரும்தொகை இந்தியத் திருநாட்டிற்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கிடைத்து வருகிறது என்பது மிகப் பெரிய செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-15

அதேபோன்று, கடல் மீன் பொருள் உணவு என்று சொன்னால், எந்தக் காலத்திலும் இல்லாத அளவாக 4½ இலட்சம் டன் கடல் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. அதேபோல 2½ இலட்சம் டன் உள்நாட்டு மீன்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இவ்வளவு மீன்கள் பிடிக்கப்படும்போது, நம்முடைய மீனவர்கள் அவற்றைச் சுகாதாரமான முறையிலே பாதுகாப்பதற்கும், அவற்றிற்கு நல்ல விலை மேலை நாடுகளிலே கிடைக்கச் செய்வதற்கும், மீன் பதனிடும் பூங்காக்கள் மிகமிக இன்றியமையாதவை என்பதை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், 13 கடலோர மாவட்டங்களில் அவற்றை அமைப்பதற்கு உத்தரவிட்டு, அந்த அடிப்படையிலே, கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களிலே 4 மீன் பதனிடும் பூங்காக்கள் அமைக்கப்படுவதற்கு வேண்டிய பூர்வாங்கப் பணிகளெல்லாம் நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட கிராமத்திலே அதை அமைக்கவேண்டுமென்று சொல்கிறார். அந்தக் கிராமத்திற்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின் பேரிலே தற்போது அமைக்கப்படுகின்ற மீன் பதனிடும் பூங்காவிற்கும் 36 கிலோ மீட்டர் தூரம்தான் இடைவெளி உள்ளது. எனவே, மீனவர்கள் அதை முழுமையான அளவிற்கு பயன்படுத்திக்கொள்ளலாம். அதன்மூலம் அவர்கள் அதிகமான அளவிற்குப் இன்னும் value added-ஆக, மதிப்பு கூட்டப்பட்ட அளவிற்கு, மீன்களை ஏற்றுமதி செய்வதற்கும் நல்லதொரு வாய்ப்பாக, வசதியாக அது அமையும். எனவே,

2016 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குளச்சல் தொகுதியில் உள்ள குறும்பனையிலிருந்து அந்த மைலாடி கிராமம் சுமார் 36 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. எனவே மீனவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதியைப் பொறுத்தவரையில், குளச்சல் கடலோரக் கிராமத்தில்தான் அதிகமான ருசியான, நல்ல தரமான, பல்வேறு வகையான மீன்கள் கிடைக்கின்றன. அவற்றைச் சேமித்து வைத்து, மீனவர்கள் பயன்படக்கூடிய வகையிலேதான் இங்கே அந்தக் கோரிக்கையை வைத்தேன். ஆகவே, நீங்கள் அதை மறுபரிசீலனை செய்யவேண்டும்.*

அதேபோன்று, மீனவர்கள் சொந்த ஊரிலே மீன்பிடித் தொழில் செய்ய, சைமன் காலனி, கோடிமுனை, வாணியக்குடி, குறும்பனை, சின்னவிளை, பெரியவிளை, மண்டைக்காடு புதூர் மீனவ கிராமங்களில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டும் என்பது அவசியம். அதை நான் கோரிக்கையாக வைக்கின்றேன். அதேபோல, தங்கு தளங்களுக்குத் தேவையிருக்கின்றன. கடியபட்டினத்திலே ஊர் மக்களே சேர்ந்து, 5 கோடி ரூபாய்க்கு தூண்டில் வளைவு அமைக்கும் பணியை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், பெரிய தூண்டில் வளைவு அமைத்தால்தான், பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால், பக்கத்தில் உள்ள முட்டத்தில் தனியாருக்குச் சொந்தமான ஒரு மீன்பிடித் துறைமுகம் இருக்கிறது. அதன் தாக்கத்தைச் சரிசெய்வதற்கு இன்னும் இதே அளவிலே 5 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்து அதை விரிவுபடுத்துவதற்கு மக்கள் விரும்புகிறார்கள். அதற்கு இந்த அரசுதான் தேவையான பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் தொகுதியில் 11 கிராமங்களில் மீனவர்களுக்குக் கட்டமைப்பு வசதிகள் செய்யவேண்டும். பழுதடைந்த சிங்கார வேலர் குடியிருப்புகளையெல்லாம் மாற்றியமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். புதிய வீடுகளை அந்த இடத்தில் கட்டிக்கொடுக்க வேண்டுகிறேன். 55,000 வீடுகள் இந்த அரசால் கட்டித்தரப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய

தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து அதைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மீனவர்களுக்கு விசைப்படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வாங்கிட வட்டியில்லாக் கடனை, வங்கிகள்மூலம் கொடுத்தால் மிகவும் நல்லது என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்து, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிசெய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில், பிரச்சினையே இல்லை. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தினை மீனவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்; அவர்களிடம் பட்டா இருக்க வேண்டும்; இல்லையென்றால் உள்ளூரிலே அவர்கள் வசிக்கவேண்டும்; கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கவேண்டும்; மாவட்ட ஆட்சியரிடம் தடையில்லாச் சான்று வாங்கவேண்டும். இதுபோன்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால், நிச்சயமாக வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே பிரச்சினையே இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள், எவ்வளவு வீடுகள் கேட்டாலும் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்.*

இன்னொன்று; கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழகக் கடலோரங்களில் பிடிக்கப்படுகின்ற அத்தனை மீன்களுமே சுவையான மீன்களாகத்தான் இருக்கின்றன. எனவே, இதிலே எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. நம்முடைய முக்கடல்களாக இருக்கக்கூடிய, இந்தியப் பெருங்கடல், அரபிக் கடல், வங்காள விரிகுடா இந்த மூன்று கடலிலுமே பிடிக்கப்படுகின்ற மீன்களெல்லாம் மிகமிக சுவையான மீன்கள் என்பதைக் கருத்தில்கொண்டுதான், உலக நாடுகளே நம்முடைய தமிழ்நாட்டிலே பிடிக்கப்படுகின்ற மீன்களை விரும்பி வாங்குவதால் முழுமையான அளவிற்கு அவர்களுக்குத் தேவை என்கின்ற அடிப்படையிலே, நாம் அவற்றை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறோம்.

2016 ஆகஸ்ட் 16]

முற்பகல் 10-20

அதேபோன்று, கடியபட்டினத்தில் தூண்டில் வளைவு அமைப்பதைப் பொறுத்தவரையில், 5 கோடி ரூபாயை அவர்கள் பங்காகச் செலுத்தியதன் காரணமாக, மீதி 10 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்து, அந்த அடிப்படையிலே சமச்சீர் நிதியைக்கொண்டு தூண்டில் வளைவு அமைக்கப்பட்டது. தற்போது அந்தத் தூண்டில் வளைவை extend செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார். நிச்சயமாக ஆய்வு மேற்கொண்டு, அதன் அடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். அதே நேரத்தில், மாவட்டம் முழுமையும் கடலரிப்புப் போன்ற பிரச்சினைகள் வரக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு பிரத்யேக ஏற்பாடாக, அந்த மாவட்டத்தில் National Institute of Oceanography, Central Water and Power Research Station, அதேபோல Bangalore-ல் இருக்கின்ற, CICEF Institute போன்றவற்றை ஆய்வு செய்யச் சொல்லி, அந்த ஆய்விலே, முழுமையான அளவிற்கு அதைச் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பார்த்து, அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, ஆய்வினுடைய முடிவின் அடிப்படையில்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியாக விசைப் படகு பற்றிக் கேட்டார்கள். விசைப் படகு மானியத்தைப் பொறுத்தவரையிலே, பிரச்சினை இல்லை. நம்முடைய tuna fish என்று சொன்னால், அதாவது தமிழிலே சூரை மீன் என்று சொல்வோம். அதிலே True tunas, Atlantic Blue fin tuna, Skip Jack tuna, Mackeral tuna, Little tunny, Euthy nnus, Auxis என்று மொத்தம் ஏழு வகைகள் இருக்கின்றன. இந்த tuna மீன்களுக்கு உலகத்திலே அதிகமான மார்கெட் எங்கே என்றால் ஜப்பான் நாட்டில்தான். எனவேதான், இந்த உலக மார்கெட்டை நம்முடைய தமிழ்நாடு பெறவேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு, எந்த ஒரு தலைவரும் சிந்திக்காத நிலையில், நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் சிந்தித்துச் செயல்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) In shore அதாவது, அண்மைக் கடல் மீன்கள் எல்லாம் குறைந்து விட்டது; நடுக்கடலில் மீன்கள் குறைவாகவே உள்ளன. ஆழ்கடலிலும்

நம்முடைய concentration இருக்கவேண்டும் என்பதற்காக, tuna மீன்கள் பிடிக்கப்படுவதன்மூலம், மீனவர்களினுடைய வாழ்வாதாரம் பெருகும் என்ற அடிப்படையிலே, இந்தியாவிலே 50 சதவீதம் subsidy, யாருமே கொடுக்காத நிலையில், ரூ.60 இலட்சம் ஒரு படகு வாங்குவதற்கு என்று சொன்னால், 30 இலட்சம் ரூபாயை subsidy-ஆகக் கொடுத்த ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 171 படகுகள் இன்றைக்குத் தயாராகி இருக்கின்றன. எனவே, நம்முடைய மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்று சொன்னால், ஆழ்கடலில் இருக்கின்ற மீன்கள் எல்லாம் இப்போது வயதாகி இறந்துகொண்டிருக்கின்றன. எனவே, நாம் அதைப் பிடிக்கவேண்டும். நாம் அதைப் பிடிப்பதன்மூலம் அந்நியச் செலாவணி ஏற்றம்பெறுவதோடு, மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்ற நிலையைத் தெரிவித்து, நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நலத் திட்டங்களுக்காக மட்டும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.258 கோடி செலவு செய்திருக்கிறார்கள், அடிப்படைக் கட்டமைப்பிற்கு என்று ரூ.278 கோடி அளவிற்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள். எந்த ஒரு ஆட்சியிலும் செய்யாத ஒரு சாதனையாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கிய தொகை இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

68—

மகளிர் கலைக் கல்லூரி

***1190—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?